**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 25 / 2025 , O.S. No. 26 / 2025 & O.S. No. 27 / 2025**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 05.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**Sandhiya (PW 1)**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 கீழான ஆவணங்களின் அடிப்படையில் நான் தாவா சொத்தின் மீது உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கீழான கிரைய பத்திரத்தில் சர்வே எண். 994 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கீழான கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தான் லில்லி என்பவரின் வாரிசுதாரர்கள் பழனி என்பவருக்கு வா.சா.ஆ.2 கீழான கிரைய பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 கீழான கிரைய பத்திரத்தில் சர்வே எண். 694 என்று குறிப்பிடப்படடுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களில் சர்வே எண்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் கீழான சொத்துக்களில் உரிய சர்வே எண். 993 ஆகும். ஒரு சொத்தின் சர்வே எண் மாறினாலும் அதன் செக்குபந்தி மாற வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கீழான கிரைய பத்திரத்தில் வடக்கில் 20 அடி ரோடு என்றும் தெற்கில் மனைஎண்.23 கிழக்கில் மனைஎண். 30 என்றும் மேற்கில் மில்க் காலனி ரோடு என அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்தில் செக்பந்தி விவரங்கள் என வடக்கில் மனைஎண். 15 என்றும் தெற்கில் மனைஎண்.19 என்றும், கிழக்கில் மனைஎண்.17 என்றும் மேற்கில் மில்க் காலனி பிரதான சாலை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கீழான கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட செக்குபந்தி விவரங்களும் நான் பிராதில் தாவா சொத்தின் செக்குபந்தி விவரங்கள் என குறிப்பிடப்பட்ட விவரங்கள் வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் சரிதான். எனவே தாவா சொத்திற்கும் வா.சா.ஆ.1 கீழான கிரைய பத்திரத்தின் கீழான சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிரையம் பெறுவதற்கு முன்னதாக நான் சொத்து சம்மந்தமாக சட்ட கருத்துரை பெற்றேன். அவ்வாறு வழங்கப்பட்ட கருத்துரை ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் பெறுவதற்கு முன்னதாக சொத்து சம்மந்தமான வில்லங்க சான்றிதழ்களை நான் வாங்கிப் பார்த்தேன். குறிப்பாக மனை எண்.16 மற்றும் 17 சம்மந்தமான வில்லங்க சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தேனா அல்லது மனை எண். 30 மற்றும் 31 சம்மந்தமான வில்லங்க சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு கிரையம் பெறுவதற்கு முன்னதாக சொத்து சம்மந்தமாக சட்ட கருத்துரையோ, வில்லங்க சான்றிதழ்களையோ நான் வாங்கிப் பார்த்திருந்தால் சொத்து சம்மந்தமான உண்மைகள் தெரிய வந்திருக்கும் என்றும், அவ்வாறு நான் சட்ட கருத்துரையோ, வில்லங்க சான்றிதழ்களையோ வாங்கிப் பார்க்காமல் நான் தவறான விவரங்களை பெற்று கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கீழான கிரைய பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின் படி சொத்தின் விஸ்தீரணம் நீள, ஆகல அளவுகள் படி 62 x43x60x57 1/2 என்றும் 60 x40 என்றும் மொத்த விஸ்தீரணம் 6030

சதுர அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த கிரைய பத்திரத்தில் உள்ள அட்டவணையில் சொத்தின் விஸ்தீரணம் 5465 சதுரஅடி என வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆவணத்தின்படி 5465 சதுர அடி நிலம் மட்டுமே கிரையம் பெறப்பட்டுள்ளது. சர்வே எண்.993 கீழான சொத்தைதான் நானும் எனக்கு முன்பு அந்த சொத்தை கிரையம் பெற்ற நபர்களும் கிரையம் பெற்று அனுபவித்து வந்ததற்கு ஆதாரமாக ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5 ன் கீழ் நான் தாக்கல் செய்துள்ள பழனி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள பட்டாவில் சர்வே எண். 993/3 பி ன் கீழான 2 விஸ்தீரணம் கொண்ட நிலங்கள் சம்பந்தமாக தீர்வை குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2 வதாக குறிப்பிடப்பட்ட 13 ஏர்ஸ் விஸ்தீரணம் அதாவது 32 செண்ட் அளவு கொண்ட நிலத்தை குறிப்பதாக உள்ளது என்றும் வா.சா.ஆ 2 ன் கீழ் பழனி என்பவர் 12 1/2 செண்ட் நிலம் மட்டுமே கிரையம் பெற்ற பட்சத்தில் 32 செண்ட் அளவு கொண்ட நிலம் சம்மந்தமாக அவருக்கு பட்டா வழங்கப்பட வாய்ப்பு இல்லை என்றும் எனவே நான் செய்துள்ள பெயர் சொன்ன பட்டாவானது முறையான ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 கீழ் நான் தாக்கல் செய்துள்ள சாம்சன்,எட்வர்ட் மற்றும் 3 நபர்கள் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டாவும் 13 ஏர்ஸ் விஸ்தீரணம் அதாவது 32 செண்ட் அளவு கொண்ட நிலத்தை குறிப்பதாக உள்ளது என்றும் சொன்னால் சரிதான். எனவே அதுவும் முறையான ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ல் சர்வே எண். 993/3பி என குறிப்பிடப்பட்டிருக்கும் பட்சத்தில் வா.சா.ஆ.7 கீழான நகர நில அளவை பதிவேட்டின் நகலில் பழைய சர்வே எண் என 993 என எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 கீழான நகர நில அளவை பதிவேட்டின் நகலில் 558 சதுர மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதற்கும் தாவா சொத்தின் விஸ்தீரணம் என நான் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. லில்லி என்பவருக்கு கிரையம் கொடுத்த கண்ணையா நாயுடு என்பவர் பெயரில் வழங்கப்பட்ட பட்டா நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.8 கீழான சான்றிதழ் மாதவரம் நகர நிலஅளவை ஆய்வாளரால் வழங்கப்பட்டது எனவும், அவ்வாறு சான்றிதழ் வழங்க அவருக்கு அதிகாரம் இல்லை மேலும் அந்த சான்றிதழில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.9 கீழான புலப்படமும் மாதவரம் நகர நில அளவை ஆய்வாளரால் வழங்கப்பட்டது எனவும், அவ்வாறு நகல் வழங்க அவருக்கு அதிகாரம் இல்லை என்றும் எனவே அது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 முதல் 12 கீழாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அசல் வழக்கு எண். 25/2025 (அசல் வழக்கு எண்.107/1999) தாக்கல் செய்த பின்னர் தயார் செய்யப்பட்டவை என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்தின் மீது உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது தவறானது என்பதை காட்டும் வகையில் நான் வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தின் நகல்களை நான் தாக்கல் செய்துள்ளேன். குறிப்பாக எவ்வாறு 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது தவறானது என்பதை குறித்து எனக்கு சொல்ல தெரியாது. வா.சா.ஆ.15 ன் கீழான 20.03.2009 தேதியிட்ட புகாரில் 1ம் பிரதிவாதி எனது சொத்தில் அத்துமீறி கருங்கல் போஸ்டல் மூலம் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் 1ம்

பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக புகார் அளித்துள்ள பட்சத்தில் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாததால் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். வா.சா.ஆ.14 கீழான குமார் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு 25.03.1976 அன்று எழுதி கொடுத்த கிரையபத்திரத்தில் 25.10.1975 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றதாகவும் அதன் அடிப்படையில் அந்த சொத்தை கிரையம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் 25.03.1997 அன்று 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தது சம்மந்தமான கிரைய பத்திரம் செல்லத்தக்கது அல்ல என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதியால் சம்பத் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 25/2025 (107/1999) வழக்கில் நான் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் ஆஜராகாமல் இருந்து வந்தேன் என்றும், பின்பு 2010 ம் வருடம் என்னால் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நான் அந்த வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதியான சம்பத் என்பவர் கிரையம் பெற்ற மனை எண். 16 ல் அவர் கிரையம் பெற்ற நாள் முதல் தொடர்ந்து அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், அதன் அடிப்படையில் அவர் தாக்கல் செய்த மேற்சொன்ன வழக்கில் அவருக்கு சாதகமாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1999 ம் வருடம் நான் சம்பத் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் அத்துமீறி நுழைய முற்பட்டேன் என்றும் அது சம்மந்தமாக அவர் 13.05.1999 அன்று கொடுங்கையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அவரது புகாரின் பேரில் நடந்த விசாரணையின் போது அவரது சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என போலீசாரால் எச்சரிக்கப்பட்டேன் என்றும், பிரச்சினை சம்மந்தமாக நீதிமன்றத்தினை அணுகி பரிகாரத்தினை பெற அறிவுறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்னவாறு பிரச்சினை ஏற்பட்டதால்தான் சம்பத் என்பவர் அசல் வழக்கு எண். 25/2025 (107/1999) தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. சம்பத் என்பவர் கிரையம் பெற்ற சொத்தை முனியாண்டி மற்றும் சண்முகவேல் ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதன் அடிப்படையில் அவர்கள் அந்த சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 2008 ம் ஆண்டு சம்பத் என்பவர் கிரையம் பெற்ற சொத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் அத்துமீறி நுழைய முயற்சித்ததால் அசல் வழக்கு எண். 26/2005(304/2008) கீழான வழக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. சம்பத் என்பவர் அவர் கிரையம் பெற்ற சொத்தை அத்துமீறி நுழையும் நபர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்து அவரது சுவாதீனத்தை காத்துக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்திற்கும் சம்பத் என்பவர் கிரையம் பெற்ற சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும், நான் தவறாக சம்பத் என்பவர் கிரையம் பெற்ற சொத்தின் மீது உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் மீது உரிய உரிமை ஏதும் இல்லாமல் நான் தாவா சொத்தின் மீது தவறாக உரிமை கோரி அசல் வழக்கு எண். 27/2025 கீழான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. சம்பத் என்பவர் எனக்கு

எதிராக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 25/2025 கீழான வழக்கில் அவர்கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.
மறு விசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.